# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:78** **தேதி:-18.11.2015**

## BSNLன் செயல்பாட்டு லாபம் 672 கோடி ரூபாய்

அன்பார்ந்த தோழர்களே,

18.11.2015 அன்றைய தேதியில் வெளியான பத்திரிக்கை செய்திகள் பலவற்றில் 2014-15 ஆம் ஆண்டுக்கான BSNLன் செயல்பாட்டு லாபம் (நிகர லாபம் அல்ல) 672 கோடி ரூபாயாக உள்ளது என BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையின் சில முக்கியமான பகுதிகள்:_

- இந்த ஆண்டு (2014-15) சேவைகளில் மூலமான வருமானம் 4 சதவிகிதம் அதிகரித்து 27,242 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டில் செயல்பாட்டு நஷ்டம் 691 கோடி ரூபாய்களாக இருந்தது, இந்த ஆண்டு அது 672 கோடி ரூபாய் லாபமாக மாறியுள்ளது.
- நிகர நஷ்டம் 8,234 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளது. தேய்மானம் 2,000 கோடி ரூபாய்கள் உயர்ந்துள்ளது.
- 10,000 ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளதால் நிர்வாக செலவு குறைந்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டு நிறுவனம் நிகர லாபத்தை அடையும்.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் 25,000 டவர்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போது மொத்தம் ஒரு லட்சம் டவர்கள் உள்ளன.
- NETWORK விரிவாக்கத்திற்காக இந்த நிதி ஆண்டில் 7,000 கோடி செலவிடப்படும்.
- மார்ச் மாத இறுதிக்குள் இரண்டு பெரு நகரங்களில் 4G சேவை துவங்கப்படும்.
- தற்போது 400 Wi-Fi HOTSPOTS உள்ளது. அது 40,000 ஆக உயர்த்தப்படும்.

**மத்திய மாநில அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் BSNL சேவைகள்:-** மத்திய மாநில அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அலுவலகங்களுக்கு நேரடியாக சென்று நமது BSNL சேவைகளை அவர்கள் பயன்படுத்தும் படி கேட்டுக்கொள்வதற்காக அடிக்கடி அந்த நிறுவனங்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தும் படியும், அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக மாதம் இருமுறை கார்ப்பரேட் அலுவலகத்திற்கு செய்தி அனுப்ப வேண்டும் என்றும் மாநில தலைமை பொது மேலாளர்களுக்கு கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் எழுதியுள்ளது.

**ஜாம்ஷெட்பூர் மாவட்ட செயலாளருக்கு கட்டாய ஓய்வு- பொது மேலாளரின் பழி வாங்கும் போக்கு:-** ஜாம்ஷெட்பூர் பொது மேலாளர் B.N.சிங், அங்குள்ள BSNL ஊழியர் சங்கத்தின் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதை நமது மத்திய சங்கம் கார்ப்பரேட் நிர்வாகத்திடம் தொடர்ச்சியாக எடுத்து வந்துள்ளது. DIRECTOR(HR) கொடுத்த உறுதி மொழியின் அடிப்படையில் நமது மத்திய சங்கம் போராட்டத்தை ஒத்தி

வைத்திருந்தது. இவற்றை விவாதிக்க ஜார்கண்ட் மாநில தலைமை பொது மேலாளர் மற்றும் ஜாம்ஷெட்பூர் பொது மேலாளர் உள்ளிட்டவர்கள் பங்கேற்கும் ஒரு கூட்டத்தை நவம்பர் 20ம் தேதி நடத்த DIRECTOR (HR) அறிவிப்பும் கொடுத்துள்ளார். இந்த சூழ்நிலையில், ஒரு பழைய ஒழுங்கு நடவடிக்கையை காரணம் காட்டி ஜாம்ஷெட்பூர் BSNL ஊழியர் சங்க மாவட்ட செயலாளருக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இது ஜாம்ஷெட்பூர் பொது மேலாளரின் பழிவாங்கும் நடவடிக்கையே அன்றி வேறு ஏதும் இல்லை. இதனை BSNL ஊழியர் சங்கம் ஏற்றுக் கொள்ளாது. கார்ப்பரேட் அலுவலகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் கடுமையான போராட்டம் நடைபெறும் என நமது மத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

ஜாம்ஷெட்பூர் மற்றும் கேரள மாநிலத்தில் நடைபெற்றுள்ள பழிவாங்குவதல் நடவடிக்கைகள் தொடர்பாக நமது பொது செயலாளர் தோழர் P. அபிமன்யு மற்றும் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் 16.11.2015 அன்று DIRECTOR(HR) திருமிகு சுஜாதா ரே அவர்களை சந்தித்து தங்களது கடுமையான ஆட்சேபனையை தெரிவித்தனர். உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என DIRECTOR(HR) உறுதி அளித்துள்ளார்.

**7ஆவது ஊதியக் குழு பரிந்துரை 19.11.2015 அன்று சமர்ப்பிப்பு:-** ஏழாவது ஊதியக்குழுவின் தலைவரான நீதிபதி A.K.மாத்தூர் அவர்கள், ஊதியக்குழுவின் பரிந்துரைகள் 19.11.2015 அன்று நிதியமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளார். இந்த பரிந்துரைகள் 01.01.2016 முதல் அமுலாக்கப்படும். இதன் மூலம் 48 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 55 லட்சம் ஓய்வூதியர்களும் பயன்பெறுவார்கள்.

**கூட்டு சதிக்காக தனியார் நிறுவனங்களுக்கு தண்டனை:-** ஜெட் ஏர்வேஸ், இண்டிகோ மற்றும் ஸ்பைஸ் ஜெட் ஆகிய தனியார் விமான சேவை நிறுவனங்களுக்கு COMPETITION COMMISSION OF INDIA தண்டத்தொகை (FINE) விதித்துள்ளது. இந்த நிறுவனங்கள் கூட்டு சதி செய்து, எரிபொருள் SURCHARGE என்ற பெயரில் வாடிக்கையாளர்களிடம் அதிக பணத்தை பெற்றுள்ளனர். இதற்காக ஜெட் ஏர்வேஸ்க்கு 151.70 கோடி ரூபாய்களும், இண்டிகோவிற்கு 63.70 கோடி ரூபாய்களும், ஸ்பைஸ் ஜெட்டிற்கு 42.5 கோடி ரூபாய்களும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுத்துறை நிறுவனமான ஏர் இந்தியா மற்றும் GO AIR நிறுவனங்கள் இது போன்ற ஏமாற்றுக்களை செய்யவில்லை என்ற முடிவிற்கு COMPETITION COMMISSION OF INDIA வந்துள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**